**பெயர் -** நூர்மா
கணவர் **பெயர் -** அகமத் மொய்தீன் வயது **48**
**நாள் - 19.07.2023**
**அசல் வழக்கு எண் - 241/2021**

**வா.சா 2 குறுக்கு விசாரணை**

வாதிக்கு தற்பொழுது 36 வயதாகும். எந்த வருடம், மாதம், நாள் எனது கணவர் செட்டில்மெண்ட் வாதிக்கு கொடுத்தார் என்றால் எனக்கு நினைவில்லை ஆனால் சுமார் 8 வருடம் முன்பு அவ்வாறு கொடுத்தார். அவ்வாறு வாய்மொழி செட்டில்மெண்ட் கொடுத்த விபரத்தை எனது மகன் வாதி தெரிவிக்காத பொழுது நான் தெரிவித்தற்கு என்ன காரணம் என்றால் எனக்கு தெரிந்து தான் வாதிக்கு கொடுத்தார். எனது கணவர் வாதிக்கு வாச்சா செட்டில்மெண்ட் கொடுத்த பொழுது பிரதிவாதியை கலந்து ஆலோசித்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கை வாதி எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி அனுபவித்து வந்த இடத்தின் பூட்டை உடைத்து பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததால் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். 2018ம் ஆண்டு பிரதிவாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் என் கணவர் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்ததற்கு நான் ஆட்சேபனை செய்தேன். எனது மகன் மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், பிரதிவாதிக்கு சொத்தை பிரித்து கொடுத்தது தவறு என்று வேறு வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். 2013ம் ஆண்டு வாதிக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் ரூ.25000 ஆகும். பிரதிவாதி பாலிடெக்னிக் படித்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் செட்டில்மெண்ட் பிரதிவாதிக்கு எழுதிவைத்த பின்பு 2 வருடம் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அந்த 2 வருட காலத்தில் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் நானோ, வாதியோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்த பொழுது நானோ, வாதியோ எந்த வழக்கும் செட்டில்மெண்ட் குறித்து தாக்கல் செய்யவில்லை. 2021ம் வருடம் பிரச்சனை ஏற்பட்ட பொழுது நானோ, வாதியோ காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்து இருக்கிறோமா என்றால் கொடுத்து இருக்கிறோம். எந்த தேதி, மாதம் அவ்வாறு புகார் கொடுத்தோம் என்று எனக்கு நினைவு இல்லை. என் கணவருக்கு மொத்தம் 5 ஆண் குழந்தைகள் ஆகும். 3 ஆண்

பிள்ளைகள் என் கணவரின் முதல் மனைவிக்கு பிறந்தவர்கள், வாதி பிரதிவாதி எனக்கும் என் கணவருக்கு பிறந்தவர்கள். வாதி பெயரில் கடை குறித்து வீட்டு வரி இரசீது எதுவும் மாற்றப்பட்டதா என்றால் இல்லை. உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா எதுவும் வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்தானது பிரதிவாதிக்கு தானமாக அளிக்கப்பட்டது என்றாலும் அதில் வாதிக்கு உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/R.Rajeshwari,B.Com.,L.LM.,
Principal District Munsif,
Sriperumbudur